# புதிய அரசியல் சாசனம்

வருகிற நவம்பர் 26 - ஆம் தேதியுடன் இந்திய அரசியலைமைப்புச் சட்டம் ஏற்கப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவடைகின்றன. இந்திய நாட்டின் பல்வேறு முக்கியப் பிரச்சினைகளுக்குப் பதில் அளிக்க முடியாத நிலையில் இந் திய அரசியல் சாசனம் உள்ளது,

இன்றைய இந்தியாவில் மக்கள் தொகை பெருக்கம், ஊழல், பொது வாழ்க்கை தூய்மையற்ற நிலை, சாதி மதச் சண்டைகள், வேலையற்ற நிலையில் இளைஞர்கள் விரக்தி, பொருளாதார நெருக்கடிகள், மத்தியில் நிலையற்ற ஆட்சிகள், மத்திய - மாநில அரசுகள் உறவில் சிக்கல், மாநில அரசுகளைக் கலைக்கும் 356 ஆவது பிரிவு பற்றிய தெளிவான விவாதம்,தேர்தல் சீர்திருத்தங்கள், ஆளுநர் பதவி குறித்த விவாதம் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்குத் தெளிவு ஏற்படும் வகையில் கடந்த 50 ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள சிந்தனைகளைக் கொண்டு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை மறு ஆய்வு செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், விவாதத்தில் இருக்கும் தேசிய அரசு இந்தியாவுக்குச் சாத்தியமா? அதே போன்று இந்தியாவிற்கு ஜனாதிபதி ஆட்சி முறை (Presidential System) வேண்டுமா?அல்லது நாடாளுமன்ற ஆட்சி முறை (Parliamentary System-ie, Westminister Type) வேண்டுமா? என்று இந்தியாவின் அடிப்படை அமைப்புகளைப் பற்றி தினமும் விவாதங்கள் நடந்து கொண்டு வருகின்றன. இதற்கு விடை அளிக்கும் வகையில், இந்திய அரசியல் சாசனம் அமைய வேண்டும்.

இந்தியா கூட்டாட்சி அமைப்பா அல்லது கூட்டாட்சி கலந்த ஒற்றையாட்சி அமைப்பா என்பதைத் தெளிவாக அரசியல் சாசனத்தில் அறிவிக்க வேண்டும். இந்திய அரசியல் சாசனம் நெகிழாத்தன்மை உடையதா அல்லது நெகிழும் தன்மையுடையதா என்பதையும் தெளிவுபடுத்த வேண்டும்.

அரசு நெறிமுறைக் கொள்கைகளை (Directive Principles of State Policy) நீதிமன்றம் மூலம் எவ்வாறு நெறிப்படுத்தலாம் என்பதையும் திட்டவட்டமாகக் கூற வேண்டும். மத்திய - மாநில உறவுகளைப் பற்றியும் மாநிலங்களுக்கு இடையே உள்ள நதிநீர்ச் சிக்கல்களை விரைவில் தீர்க்கவும் அரசியல் சட்டம் ஒரு வழிகாட்டியாக இருக்க வேண்டும். மத்திய மாநில உறவுகளை ஆராய இதுவரை இந்தியாவில் நீதிபதி சர்க்காரியா குழு, தி.மு.க. அரசால் நியமிக்கப்பட்ட நீதிபதி ராஜமன்னார் குழு போன்ற குழுக்களின் பரிந்துரைகள் அரசியல் சட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

மேற்கு வங்க அரசின் சார்பில் அம் மாநில முதல்வர் மத்திய அரசுக்கு அளித்த மத்திய - மாநில உறவுகள் குறித்த அறிக்கை, ஹைதராபாத், ஸ்ரீநகர், கல்கத்தா, பெங்களூர் போன்ற நகரங்களில்

கருணாநிதி, என்.டி.ராமாராவ், ஜோதிபாசு, ஈ.கே.நாயனார் ஃபரூக் அப்துல்லா, * ராமகிருஷ்ண ஹெக்டே போன்ற முதல்வர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள் கலந்து கொண்டு மத்திய - மாநில உறவுகள் குறித்து மாநாட்டில் எடுக்கப்பட்ட விவாதங்களையும் மனதில் கொள்ள வேண்டும். நாட்டின் பாதுகாப்பு, நிதி, இரயில்வே, தொலைத் தொடர்பு, வெளி உறவு போன்ற துறைகள் மட்டுமே மத்திய அரசிடம் இருக்கலாம் என்ற கருத்துகள் இம்மாநாட்டில் தெரிவிக்கப்பட்டன.

இந்திய அரசியல் சட்டம் 356-வது பிரிவின்படி மாநிலத்தின் ஆளுநருடைய பரிந்துரை - இல்லாமல் மற்ற வகையில் (otherwise) என்ற சொற்றொடரின்படி மாநில அரசுகளை மத்தியஅரசு சில சமயங்களில் கலைத்து விடுகிறது.

தமிழகத்தில் 1991 -- இல் தி.மு.க.அரசு இதைப் போன்று ஆளுநருடைய பரிந்துரை - இல்லாமல் 'அதர் வைஸ்' என்று அரசியல் சாசனத்தில் கூறப்பட்டுள்ள சொற்றொடரின் அடிப்படையில் கலைக்கப்பட்டது. இதுவரை இந்தியாவில் 50 ஆண்டுகளில் 105 முறை மத்திய அரசால் ஆட்சிக் கலைப்புகள் செய்யப்பட்டுள்ளன. இந்தியக் குடியரசுத் தலைவர் அவசரநிலையைப் பிரகடனம் செய்யவும், பிரதம அமைச்சரைக் கூட நீக்கவும், நாடாளுமன்றத்தைக் கலைக்கவும் அதிகாரம் இருந்தாலும் இந்தியக் குடியரசுத் தலைவர் ஒரு சம்பிரதாயத் தலைவராகவே இருக்கிறார். பிரதம அமைச்சருக்கும், இந்தியக் குடியரசுத் தலைவருக்கும் உள்ள உறவை அரசியல் சாசனம் தெளிவுபடுத்தவில்லை. இதனால், பண்டித நேருவுக்கும், இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவரான இராஜேந்திர பிரசாத்துக்கும் கருத்து வேற்றுமைகள் பல சமயங்களில் ஏற்பட்டன. நீதித்துறைக்கும் நாடாளுமன்றத்திற்கும் கருத்து மோதல்கள் ஏற்பட்டுள்ளன. திட்டக் கமிஷன் மற்றும் நிதிக் கமிஷன் பற்றிய பணிகள் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை.

1998 தேர்தலில் 170 அரசியல் கட்சிகள் களத்தில் இருந்தன. 1967 - ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் செலவு ரூ.16 கோடியாக இருந்தது. 1998 - இல் 621 கோடி ரூபாய் செலவு செய்ய வேண்டிய நிலைமை இந்திய அரசுக்கு ஏற்பட்டது.

நாடாளுமன்றமும், சட்டமன்றமும் 5 ஆண்டுகள் எவ்விதத் தடையுமின்றி இயங்க வேண்டும் என்று கருத்து தெரிவிக்கப்படுகிறது.

இந்திரஜித் குப்தா குழுவின் பரிந்துரையின்படி தேர்தல் செலவுகளை (State Funding)அரசே ஏற்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைத் திரும்பி அழைக்கும் (Recall) உரிமை மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். கிரிமினல்களும் சட்டத்தை மீறுபவர்களும் தேர்தலில் போட்டியிடுவதைத் தடை செய்ய வேண்டும். விகிதாச்சார பிரதிநிதித் துவ அடிப்படையில் தேர்தல் நடத்துவதைப் பற்றி ஒரு பொது விவாதம் நடத்தப்பட வேண்டும். நாட்டின் முக்கியப் பிரச்னைகளை மக்களிடம் இருந்து கருத்தறியும் (Referendum) முறையை நடைமுறைப்படுத்த வேண்டும். கல்வி, உறைவிடம், பணி (Right to Education, Housing, Work) ஆகியவை அடிப்படை உரிமைகளாக்கப்பட வேண்டும். அரசுப் பணிகள் மக்களுக்குத் தெரியக் கூடிய வகையில் வெளிக்காட்டுதல் உரிமை வழங்கப்பட வேண்டும். மாநிலங்களுக்கிடையேயான

அவையை அரசியல் அதிகாரம் பெற்ற அவையாக மாற்றி அரசியலமைப்பில் அதற்கொரு முக்கியத்துவம் ஏற்படுத்த வேண்டும்.

பல தெளிவின்மைகள்(Ambiguity) நமது அரசியல் சாசனத்தில் இருக்கின்றன. ஒரு நாட்டின் ஜீவ நாடியாக உள்ள அரசியல் சாசனம், நாட்டைநடத்திச் செல்லும் வழிகாட்டியாக விளங்க வேண்டும்.

இந்திய அரசியல் சாசனம், காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளை ஏற்றுக்

கொண்ட பெரும்பான்மையினரால் வகுக்கப்பட்டது. 9.12.1946 - இல் அமைக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபையின் 296 உறுப்பினர்கள் இந்தியாவின் அனைத்துத் தரப்பு மக்களின் விருப்பத்திற்கு ஏற்றவாறு தேர்ந்தெடுக்கப்படவில்லை என்ற கருத்து இருக்கின்றது ஜெயப்பிரகாஷ் நாராயணன், ஆச்சாரியார் நரேந்திர தேவ் போன்ற சோசஸ்டுகள் அரசியல் நிர்ணய சபையில் பங்கேற்க விரும்பவில்லை. இந்த அரசியல் சாசனத்தை வகுக்க கிட்டத்தட்ட 6.3 லட்ச ரூபாய் செலவாகியது. வயது வந்தவர்களால் ஓட்டளித்துத் தேர்ந்தெடுக்கப்படவில்லை. இன்றைக்கு உள்ள தேர்தலில் இந்தியாவில் உள்ள அத்துனை குடிமக்களும் வாக்களித்துத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற பிரதிநிதிகள் போல்   இல்லாமல் ஒரு குறிப்பிட்ட மேட்டுக்குடி, கல்வி கற்றோர் என்ற அடிப்படையில் அரசியல் நிர்ணய சபைக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். எனவே, இன்றைக்கு உள்ள இந்திய அரசியல் சாசனம் என்பது அனைத்து இந்திய மக்களின் பிரதிபலிப்பல்ல.

மத்திய அரசில் மாநிலக் கட்சிகள் முக்கிய பங்கேற்கக்கூடிய நிலைமைகள் மாறி உள்ளன. மாநிலங்களின் நலன்கள் காக்கப்பட வேண்டும். அடிப்படை உரிமைகள், மதச்சார்பின்மை சட்டத்தின் ஆட்சி, கூட்டாட்சி முறை போன்றவற்றைக் கவனத்தில் கொண்டு இந்திய அரசியலமைப்பைச் செய்ய வேண்டும்

இந்திய அரசியல் சாசனத்தில் இன்றுவரை 78-க்கு மேல் சட்டத் திருத்தங்கள் வந்துள்ளன. சுமார் 50 ஆண்டிற்குள்ளேயே இவ்வளவு திருத்தங்கள் இந்திய அரசியல் சட்டத்தில் சில தெளிவின்மைகள் இருப்பதே இதற்குக் காரணம். அமெரிக்க அரசியல் சாசனம் உருவாக்கப்பட்டு கிட்டத்தட்ட 211 ஆண்டுகள் ஆயினும் 27 சட்டத்திருத்தங்களே அந்த நாட்டின் அரசியல் சாசனத்தில் செய்யப்பட்டுள்ளன.

உலகிலேயே இந்திய அரசியல் சாசனம்தான் அதிகமான பிரிவுகளும், பக்கங்களும் அடங்கிய அரசியல் சாசனமாகும். 1935- ஆம் ஆண்டின் சட்டத்தின் அடிப்படையைக் கொண்டு நமது அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டது. இந்திய அரசியல் சாசனம் விடுதலைப் போராட்ட உணர்வுகளினால் பன்மையிலும் ஒருமை என்ற தத்துவத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது.ஆனால், பல்வேறு மொழிகள், இனங்கள், கலாசாரங்கள் ஆகியவற்றை எல்லாம் ஒட்டுமொத்தமாக கட்டுக்கோப்பாகச் சேர்ந்து வைக்கின்ற கருவியாக அரசியல் சாசனம் இருக்கவில்லை.

அரசியல் சாசனம் சமுதாய ஏற்றத் தாழ்வுகள் - இல்லாதவாறு வழி செய்யும் வகையில் அமைய வேண்டும். இந்தியாவினுடைய பிரச்சினைகள், கலாச்சாரம், இந்திய மக்களின் தேவைகளை மனதில் கொண்டு மண் வாசனைகளையும் பிரதிபலிக்குமாறு நமது அரசியல் சாசனம் அமைய வேண்டும். அரசியல் சாசனம் அந்த நாட்டின், பொதுமக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும்.

25.11.49 - இல் டாக்டர் அம்பேத்கர் இந்திய அரசியலப்புச் சட்டத்தின் தேவைக்கேற்றவாறு அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றிக் கொள்ளலாம் என்றும், இந்திய அரசியலமைப்புச் சட்டம் மக்களுக்குப் பயனளிவிக்கவில்லையெனில் அதை எரிக்கக் கூடிய முதல் நபராக நான் இருப்பேன் என 2.9.53 - இலும் மாநிலங்களவையில் தெளிவாக்கியுள்ளார்.

கடந்த 1998- ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை மாற்ற வேண்டுமா என்பது பற்றி ஆய்வு செய்தபோது 68 சதவீதத்தினர் மாற்ற வேண்டுமென கருத்துத் தெரிவித்துள்ளனர்.

பல்வேறு தேசிய இனங்கள். மொழிகள், கலாசாரங்கள் உள்ள இந்தியாவில் இந்திய ஒருமைப்பாட்டைக் காக்கக் கூடிய இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை மறு ஆய்வு செய்ய வேண்டுமென்று பாரதீய ஜனதா கூட்டணி அரசு 1998 முதல் வலியுறுத்தி வருகிறது.

இந்திய விடுதலைப் பொன்விழாவையொட்டி நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் இந்தியா அனைத்துத் துறைகளிலும் மறுமலர்ச்சி பெற, அன்றைய மக்களவைத் தலைவர் சங்மா இரண்டாவது விடுதலைப் போரை நடத்த அறைகூவல்விடுத்தார். அதற்கேற்ற வகையில் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய வகையில் இந்திய அரசியலமைப்புச் சட்டம் மாற்றப்பட வேண்டும். இதுகுறித்து ஏற்கனவே நீலம் சஞ்சீவரெட்டி பி.கே.நேரு, ஜே.ஆர்.டாட்டா, என்.டி.ராமராவ், பல்கிவாலா, சட்டவல்லுநர் ராவ் போன்றோர் வலியுறுத்தியுள்ளனர்.

எனவே, மக்களின் தேவைகளுக்கு ஏற்றவாறு நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நிலைமைகளுக்கு அவ்வப்போது தெளிவுபடுத்துகின்ற உயிருள்ள ஜீவனாக இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஆய்வு செய்து திருத்தப்பட வேண்டும்.

**தினமணி**, 25.11.1999